**ORIGINAL ARTICLE**

# விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும் அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களும்

**[VICĒṬA TĒVAIYUṬAIYA MĀṆAVARKAḶ KAṞṞALIL ETIRKOḶḶUM CAVĀLKAḶUM AVARKAḶUKKĀṈA KAṞṞAL VĀYPPUKKAḶUM]**

# CHALLENGES FACED BY STUDENTS WITH SPECIAL NEEDS AND LEARNING OPPORTUNITIES FOR THEM

**சாஹுல் ஹமீட் மொஹமட் சஸ்னி *[1] / S.H.M.Shazny *[1]**

[1] Department of Secondary and Tertiary Education, Faculty of Education, The Open University of Sri Lanka, Sri Lanka. Email: shazny739@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/113

**Abstract**

Contemporary school curriculum more emphasis on student-centered in which is expected to provide an opportunity for learning for all students in the classroom. Students have diverse needs in their learning. There are individual differences and special educational needs among students in the classrooms. Teachers should pay attention on students' diverse needs and their special educational needs. The main purpose of this study was to find out the Challenges faced by students with special needs and learning opportunities for them in the secondary schools. The study was conducted on 50 students and 20 teachers from 5 schools selected from the Tamil language secondary schools in Kalpitiya zonal of education. There were five research questions have been put forward for achieving the purpose of the study. Research tools such as questionnaire observation interviews have been used to gather the information needed for this study. The data obtained from the students and teachers selected for the study is analyzed through charts of tables. It was found that Students with special needs lagged in the learning activities in the classrooms. Therefore, it is recommended that the teachers should take more about the students with learning difficulties and ensure involvements in the learning activities.

**Keyword:** Learning opportunities, Secondary Schools, Students with Special Educational Needs

**ஆய்வுச் சாரம்**

இலங்கையின் தற்போதைய பாடசாலை கலைத்திட்டமானது மாணவர்களை மையமாகக் கொண்டுள்ளது. இதனால் வகுப்பறையில் உள்ள மாணவர்களுக்கு கற்றலுக்கான சமமான வாய்ப்புக்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவர்கள் பல்வேறான சவால்களை எதிர் கொள்கின்றனர். மாணவர்களிடையே தனிப்பட்ட வேறுபாடுகள், விசேட கல்வித் தேவைகள் என்பன காணப்படுகின்றன. ஆசிரியர்கள் மாணவர்களின் மாறுபட்ட கல்வித் தேவைகள் மற்றும் அவர்களின் விசேட கல்வி தேவைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாக இடை நிலைப் பாடசாலைகளில் காணப்படுகின்ற விசேட தேவைகளையுடைய மாணவர்கள் மற்றும் அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களில் உள்ள சவால்களைக் கண்டறிவதாகும். இந்த வகையில் இலங்கையின் கற்பிட்டிக் கல்வி வலயத்தில் உள்ள தமிழ் மொழி மூல இடை நிலை பாடசாலைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 05 பாடசாலைளைச் சேர்ந்த 50 மாணவர்கள் மற்றும் 20 ஆசிரியர்கள் மீது இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் நோக்கத்தை அடைவதற்கு ஐந்து ஆராச்சிக் கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்குத் தேவையான தகவல்களை சேகரிக்க வினாத்தாள், அவதானிப்பு, நேர்காணல் போன்ற ஆராச்சிக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர் களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள், அட்டவணைகள் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டன. இந்த வகையில் விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்கள் வகுப்பறை கற்றல் நடவடிக்கைகளில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டது. எனவே ஆசிரியர்கள் கற்றலில் சிரமங்களை எதிர் கொள்கின்ற மாணவர்களைப் பற்றி அதிக கவனம் எடுத்துக்கொள்ளவும், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபாட்டினை அதிகரித்து உறுதிப்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது.

**கருச்சொற்கள்:** கற்றல் வாய்ப்புக்கள், இடைநிலை பாடசாலைகள், விசேட தேவையுடைய மாணவர்கள்.

.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 23th October 2020, revised 17th November 2020, accepted 30th November 2020

## முன்னுரை

சமுதாயத்தில் ஆசிரியர்களின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததும், மகத்துவமிக்கதுமாக காணப்படுகின்றது. தம் பிள்ளைகளை புத்தி ஜீவிகளாக்கி சமுதாயத்திற்கு ஏற்ற நல்ல பிரஜையாக்கும் பொறுப்பை பெற்றோர்கள் பாடசாலையிடம் விடுகின்றனர். பாடசாலையின் பிரதான இயக்குனர் ஆசிரியர்களாவர். பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல்,

அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவராக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். இன்று ஆசிரியரின் பணியும், பங்கும் மிகவும் விசாலமானது. பல்வேறுபட்ட கற்றல் தேவை எனும் போது ஒரு வகுப்பறையில் மீத்திறன் மாணவர்கள், மெல்லக்கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் என பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன், போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas and Nawastheen, 2019)[1].

இந்த வகையில் 1983 இல் *UNESCO* நிறுவனத்தின் கல்வி பற்றிய உறுப்புரையிலும் 1994ல் 'அனைவருக்கும் கல்வி' என்ற எண்ணக்கருவை மெய்ப்பிக்கும் பொருட்டு சலமன்கா பிரகடணத்தின் *(Salamanka Declaration)*[2] படியும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி பற்றிய வரைவிலக்கணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"விசேட கல்வி என்பது ஒருவர் தமது வயதிற்கு இணங்க பெற்றுக் கொள்ளப்படும் கல்வியையும், தேர்ச்சிகளையும், பெறுபேறுகளையும், சமூகம் சார்ந்த ஏனைய தேர்ச்சிகளையும், சாதாரன கல்வியினூடாக பூர்த்தி செய்ய முடியாதவர்களுக்கு அத்தகைய மட்டத்தை அடைந்து கொள்ளும் நோக்கிலான ஒரு கல்வி முறையாகும்."

“பறிப்பும், அவலமும், நெருக்குவாரங்களும், ஒடுக்கு முறைகளும் நிலவும் சூழலில் மாணவர் ஒருவரால் கற்றலை வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்ல முடியாது” (Jeyarasa, 2008)[3]. எனவே மாணவர்களின் கற்றலில் செல்வாக்கு செலுத்தும் காரணியாக சமூக இருப்பு காணப்படுகின்றது. ஒரு சமூகத்தின் முழுமையானதும் தொடர்ச்சியானதும் வளர்ச்சி மாணவ சமூகத்தின் கைகளிலேதான் தங்கியுள்ளது. மீண்டும் தங்களது வாழ்வை நிலை நிறுத்த முயற்சித்து வரும் மக்களின் கல்வித்தரமும் நிலை கொள்ள வேண்டிய அவசியமுண்டு. எனவே அனைத்து மாணவர்களும் கற்றல் செயற்பாட்டில் முழுமையாக உள்வாங்கப்பட வேண்டும் (Sinnaththambi, 2007)[4].

கற்றல் என்பது அறிவு, சிந்தனைத்திறன் மற்றும் நடத்தைகளில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிக்கின்றது. சமூக அறிகைவாதிகளின் கருத்தின் படி கற்றலுக்கான அடிப்படையாக நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிப்பிடலாம் (Nawastheen, Jazeel,Sifani and Ponniah, 2020)[5]. சமூக மாற்றங்களும் சூழல்சார் பிரச்சினைகளும் கல்வித்துறையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இத்தாக்கங்களால் ஏற்படுகின்ற விளைவுகள் நன்மை பயப்பனவாகவும், மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன (Jeyarasa, 2006)[6].

இந்த உலகில் பிறக்கின்ற குழந்தைக்கு எந்த அளவிற்கு சுவாசிப்பதற்கு உரிமை இருக்கின்றதோ அந்தளவிற்கு கல்வி கற்பதற்கும் உரிமை இருக்கின்றது. இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் கல்வியின் மூலமாகவே மேம்படுகின்றான். கல்வியின் மூலமாகவே வளப்படுத்தப்படுகின்றான். அவன் சமூகத்தின் சுமை என்ற நிலையிலிருந்து சமூகத்தினுடைய உன்னதமான நிலைக்கு மாற்றப்படுவது கல்வியின் ஊடாகவே என்பது இதன் மூலம் புலனாகின்றது (Chandarasekaren, 2008)[7]. கற்றலில் மாணவர்களை பொருத்தமான வகையில் ஊக்குவிப்பதும் வினைத்திறனுள்ள கற்றலுக்கு வகை செய்வதும் கல்விசார் துறையைச் சேர்ந்த அனைவரினதும் கடமையாகின்றது (Chandarasekaren, 2004)[8].

சவால்கள் என்பது மனித செயற்பாடுகள் யாவற்றிலும் ஏற்பட கூடியது. பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் கற்றலுக்கு பொருத்தமாக அல்லது கற்றலுக்கு ஆயத்தமாக இருப்பதில்லை (Paramanantham, 2007)[9]. மாணவர்களிடையே பல்வேறு தனியாள் வேறுபாடுகள் காணப்படுவதற்கிணங்க பல்வேறு குறைபாடுகளைக் கொண்ட மாணவர்களும் பெருமளவில் காணப்படுகின்றனர் (Chandarasekaren, 2005)[10]. பொதுவாக சாதாரன மாணவர்கள் கற்பதை விட கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளின் போது சிரமப்படுபவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என கருத முடியும். இம்மாணவர்களையும் கற்றல் செயற்பாட்டில் உள்வாங்கப்படுதல் அவசியமாகின்றது (Sinnaththambi, 2008)[11].

அறிவு, திறன், மனப்பாங்கில் வளர்ச்சி பெறவும் சமூகத்தின் ஓர் அங்கத்தவன் என்ற வகையில் செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோர், கற்றலில் குறைவான ஆற்றலுடையோர், உடற் குறைபாடுடையோர் யாவரும் கல்வி பெற வேண்டியது அவசியமானதுடன் அதற்கான வாய்ப்புக்களை கல்விச் சமூகம் மேற் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகின்றது (Selvaraja, 2005)[12]. விசேட தேவையுடைய மாணவர் களுக்கான கல்வி வாய்ப்பினை வழங்குவதில் பிரதானமாக விளங்குபவர் ஆசிரியராவார். மாற்றங்களை ஏற்படுத்த கூடிய காரணிகளில் உள்ள இடர்களை களைந்து கற்றலை விரைவு படுத்துவதில் ஆசிரியரின் பங்கு இன்றியமையாததாகும். இதற்கு ஆதாரமாக வாட்சன், மார்க்கிராட்மீட் போன்ற சூழ்நிலை வாதிகளின் ஆய்வு முடிவுகள் எடுத்துக்கூறுகின்றன. இவர்கள் பயிற்சிகள் மூலம் ஒருவனை எத்தகைய பண்புகளையும் பெற்று வளரச் செய்யலாம் என்பதை நிருபித்துள்ளனர் (Krishnapillai, 2009)[13]. கற்றலை பாதிக்கும் காரணிகளின் தாக்கத்தை மறந்து தம்மிடம் கற்கும் பிள்ளைகளிடம் கற்றலை ஏற்படுத்த அல்லது விரைவு படுத்த தன்னால் இயன்ற உதவிகள், நுட்பங்கள் என்பவற்றை கையாள்வது அவசியமாகும் (Logeswaran, 2008)[14].

கற்றல் சவால்களைக் களைவதில் வகுப்பறை முகாமைத்துவத்திற்கு பாரிய பங்குண்டு. எனவே ஆசிரியர்களது கற்பித்தல் திட்டமிடலானது சிறப்பாக அமைகின்றதா என்பதை ஆய்வின் மூலம் கண்டறிய வேண்டியுள்ளது (Mahesan, 2009)[15]. மேலும் Thanapalan என்பவர் "வகுப்பறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே வகுப்பறை முகாமைத்துவமாகும். இது பாட ஏற்பாடுகளைத் திட்டமிடுதல், நடைமுறைகளையும் வளங்களையும் ஒழுங்கு செய்தல், மாணவர் முன்னேற்றத்தை கவனித்தல், வரக்கூடிய பிரச்சினைகளை எதிர்பார்த்தல்

என்பவையாகவுள்ளன” என்கிறார் (Thanapalan, 2003)[16]. சில மாணவர்கள் வேகம் கூடியவர்களாகக் காணப்படுவர். சில மாணவர்கள் வேகம் குறைந்தவர்களாகக் காணப்படுவர். இவ்வேறுபாடுகளுக்கேற்ப கற்றலுக்குரிய சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் (Janakumaran, 2005)[17].

ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றியை முழுமையாக அடைந்து கொள்ள இடர்படும் மாணவர்கள் தொடர்பாக அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர். பாடசாலையின் வளர்ச்சி என்பது அனைத்து மாணவர்களின் வளர்ச்சியாகும் (Sinnaththambi, 2007)[4]. எனவே கவனத்தில் எடுக்கப்படாத விசேட தேவையுடைய மாணவர்களும் கல்வியைப் பெற உரிமையுடையவராவர். மாணவர்களின் நிலை, ஆளணி வளம், பாடசாலை சார்ந்த கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள், அவற்றுக்கான பௌதீக வளங்கள், பாடசாலையுடன் தொடர்புபட்ட சமூக காரணிகள் என்பவை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன (Thanaraj, 2005)[18]. இவ்வனைத்துச் செயற்பாடுக ளிலும் தொடர்பு பட்டிருப்பதால் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாகின் றது.

**ஆய்வுக்குறிக்கோள்கள்**

1) ஆய்விற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதை இனங்காணுதல்.
2) வகுப்பறையில் செயற்படுத்தப்படும் கற்பித்தல் செயன்முறைகளில் விசேட தேவை மாணவர்களின் பங்குபற்றலை அறிதல்.
3) விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பளிக்கும் பாடசாலைச் செயற்பாடுகளை கண்டறிதல்.
4) விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்கு தேவையான வளங்கள் பாடசாலையில் உள்ளனவா? அவை உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதை மதிப்பிடுதல்.
5) விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்த தேவையான வழிமுறைகளையும் ஆலோசனைத் தீர்வுகளையும் முன்மொழிதல்.

**ஆய்வு முறையியல்.**

கற்பிட்டிக் கோட்ட மட்டத்தில் காணப்படக் கூடிய தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் இருந்து மாதிரிப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகளின் மாதிரித் தெரிவானது படையெடுப்பு மாதிரி அடிப்படையில் இடம் பெற்றுள்ளது. கற்பிட்டி கோட்ட மட்டத்திற்குட்பட்ட 24 தமிழ் மொழிப் பாடசாலைகளில் இருந்து 5 பாடசாலைகள் படையெடுப்பு மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கு விசேட

தேவையுடைய 50 மாணவர்களும் தரம் 6 - 9 வரையில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுள் 20 ஆசிரியர்களும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர்.

**தரவு முன்வைப்பும் பகுப்பாய்வும்.**

**வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளுக்கான பகுப்பாய்வு**

### 1.1 விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்கொள்ளும் கற்றல் சவால்கள்

இப்பிரதேச பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்கொள்ளும் கற்றல் சவால்களாக உடல், உள்ளம், வாசிப்பு மற்றும் எழுதுதல் போன்ற கற்றல் சவால்களை எதிர் கொள்கின்றனர். அதேவேளை எவ்வகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றனர் என ஆசிரியர்களிடம் வழங்கப்பட்ட வினாவிற்கு உடல் மற்றும் உள்ளம் தொடர்பில் விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்பட்டாலும் வாசிப்பு ரீதியாக அதிக விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுவதாக தெரிவித்தனர். இடை நிலைப்பிரிவில் எந்த தரத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் அதிகம் காணப்படுகின்றனர் என்பது தொடர்பான வினாவிற்கு தரம் 06ல் அதிக விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுவதாக தெரிவித்தனர்.

### 1.2 மாணவர்களிடம் பெறப்பட்ட வினாக்களுக்கான பகுப்பு

கற்றல் முறைகளில் முழுமையான ஈடுபாட்டுடன் செயற்பட முடிகின்றதா என்பதை அறியும் வகையில் மாணவர்களிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அதிகமானவர்கள் (48வீதம்) ஓரளவு என குறிப்பிட்டனர். கற்றல்-கற்பித்தல் செயன் முறைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஆசிரியரால் கருத்திலெடுக்கப்படுகின்றனரா? என்பதற்கு மாணவர்கள் வழங்கிய பதில்களின் படி அதிகமானோர் ஆசிரியர்களின் கணிப்பிற்குட்படுவதில்லை என்பது தெரிய வந்தது. குழுச்செயற்பாட்டில் செயற்படக்கூடிய வாய்ப்புகள் எவ்வாறுள்ளன என மாணவர்களிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 56 வீதமானோர் ஓரளவே குழுச்செயற்பாடுகள் இடம் பெறுவதாக தெரிவித்தனர்.

### 1.3 விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளில் பங்குபற்றல் தொடர்பாக வினாக்கொத்து மூலமாக ஆசிரியர்களிடம் பெறப்பட்ட தகவலின் பகுப்பு

விசேட தேவையுடைய மாணவர்களையும் கருத்தில் கொண்டு கற்பித்தலை ஒழுங்கமைத்தல், குழுச்செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், ஆசிரியர்கள் மாணவர்களுடன் சிறந்த தொடர்பை பேணுதல், விசேட தேவையுடைய மாணவர்களும் தேர்ச்சி பெறுகின்ற வகையில் கணிப்பீட்டு

முறைகள் தயாரிக்கப்படுதல் மற்றும் ஆசிரியர்கள், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வழிகாட்டி போதிய ஊக்குவித்தலை வழங்குதல் போன்ற வினாக்களுக்கான பகுப்பின் அடிப்படையில் அதிகமான ஆசிரியர்கள் மிக நன்றாக கற்பிப்பதாக குறிப்பிட்டனர்.

### 1.4 விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கற்றல் வாய்ப்புக்களை வழங்கும் பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பான பகுப்பு

#### 1.4.1 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்களின் பகுப்பாய்வு

நீங்கள் எதிர் கொள்ளும் கற்றல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கு பாடசாலையின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையின் உதவியைப் பெற்றுள்ளீர்களா?, விசேட தேவையுடைய மாணவர்களின் நிலை தொடர்பாக ஆசிரியர்கள் பெற்றோருடன் கலந்துரையாடுகின்றனரா? போன்ற வினாக்களுக்கு மாணவர்கள் வழங்கிய தகவல்களின் பகுப்பினடிப்படையில் 50 வீதமானோர் நன்று என்றே குறிப்பிட்டனர்.

#### 1.4.2 விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பளிக்கும் பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர் வழங்கிய தகவல்களின் பகுப்பு.

வழிகாட்டல்-ஆலோசனை தொடர்பாக டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றுள்ளீர்களா? என ஆசிரியர்களிடம் வினவப்பட்டது. இது தொடர்பாக 35 வீதமான (07) ஆசிரியர்கள் ஆம் எனவும் 65 வீதமான (13) ஆசிரியர்கள் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் விசேட தேவையுடைய மாணவர்களின் நிலை தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடலை மேற்கொள்கின்றீர்களா? என்றும் வகுப்பறை முகாமைத்துவத்தை சிறப்பாக பேணுவதனூடாக விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலுக்கு பங்களிப்புச் செய்ய முடிகின்றதா? தொடர்பாக ஆசிரியர்களிடம் கேட்கப்பட்டதற்கு 70 வீதமான ஆசிரியர்கள் ஓரளவு என்றே குறிப்பிட்டனர்.

### 1.5 கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் முக்கியம் பெறுகின்ற பாடசாலை வளங்கள் தொடர்பான பகுப்பு.

கற்றலுக்கான உபகரணங்கள் மாணவர்களுக்கு கிடைக்கின்றமை தொடர்பிலும், ஆளணிவளம் தொடர்பிலும், பௌதீக வளங்கள் தொடர்பாக மாணவர்களிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு தேவையான வளங்கள் தொடர்பான பகுப்பின் அடிப்படையிலும் நோக்கும் போது இப்பிரதேச பாடசாலைகளில் வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுவது கண்டறியப்பட்டது.

### 1.6 நேர்காணல் முறையினூடாக பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு.

#### 1.6.1 ஆசிரியர்களிடம் நேர்காணல் மூலம் பெறப்பட்டவை.

ஒவ்வொரு மாணவரதும் கற்றல் செயற்பாட்டை அவதானித்து கற்பித்தலை மேற்கொள்கிறீர்களா? என ஆசிரியர்களிடம் வினவப்பட்டதற்கு அமைவாக அதிகமான ஆசிரியர்கள் ஆம் என பதிலளித்திருந்தாலும் நூறுவீதம் அதனை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தனர். இம்மாணவர்களுக்கான நேரத்தை செலவிடும் போது ஏனைய மாணவர்களுக்கான கற்பித்தலையும் கவனிக்க வேண்டியுள்ளது. எனவே ஒவ்வொரு மாணவனுக்கும் ஏற்றவகையில் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடுவது இயலாது எனவும் முழுமையாக இம்மாணவர்கள் மீது கவனத்தை செலுத்த முடியாமலிருப்பதாகவும் தெரிவித்தனர்.

#### 1.6.2 அதிபர்களிடம் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களின் தொகுப்பு.

கற்றலில் சிரமப்படுகின்ற மாணவர்கள் இடை நிலைப்பிரிவில் அதிகமாக காணப்படுகின்றனரா? அதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா? என கேட்கப்பட்டதற்கு அமைவாக 2அதிபர்கள் ஏற்றுக் கொண்டதுடன் 3 அதிபர்கள் அதிகம் என சொல்ல முடியாது ஓரளவு காணப்படுகின்றனர் என தெரிவித்திருந்தனர். மேலும் தரம் 6, 7, 8 மற்றும் 9 வகுப்புகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஆசிரியர்களால் அதிக கவனிப்பிற்கு உள்ளாக்கப்படுதல் குறைவாக காணப்படுகின்றது. ஏனெனில் இத்தரங்களில் பொதுப்பரீட்சைகள் இல்லாத காரணத்தினால் மாணவர்கள் தொடர்பாக அதிக அக்கறை எடுக்காமல் இருக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா? என கேட்கப்பட்ட வினாவிற்கு, இவ்வாறான கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என 2அதிபர்களும் ஓரளவு ஏற்றுக்கொள்வதாக 3அதிபர்களும் தெரிவித்தனர். இவ்விடயத்தை ஆசிரியர்களும் பெரும்பான்மையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்ற கருத்தினையே வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### விதந்துரைப்புகள்:

- செயல்நிலை ஆய்வுகளில் ஆசிரியர்கள் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவினை மையப்படுத்தி தொடர்ச்சியான பல்வேறு செயற் றிட்டங்களையும் உத்திகளையும் கையாள்வதும், தொடர்ச்சியாக இம்மாணவர்கள் பற்றிய பயனுள்ள ஆய்வுகளை மேற்கொள்வதும் ஒரு தொடர் நிகழ்வாக அமைதல் வேண்டும். இச்செயற்பாடு களினூடாக விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக் கையை இழிவளவாக்க முடியும் (Thanaraj, 2005)[18].
- அதிபரின் செயற்பாடுகள், அதிபரின் மேற்பார்வைகள், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றலில் அதிகம் வாய்ப்பளிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க ஆசிரியர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும் (Logeswaran, 2008)[14].

- வலய, மாகாண மட்டச் செயற்பாடுகள், கற்றல்-கற்பித்தல் நுட்பமுறைகள், பயிற்சிகள் போன்றவற்றினை ஆசிரியர்களை நோக்காக கொண்டு வலய மாகாண மட்டங்களில் முன்னெடுக்க வேண்டும் (Janaraththanam, 2005)[17].
- பௌதீக வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மாணவர்களுக்கான பயிற்சி பாசறைகள், உளவள ஆலோசனை நிகழ்ச்சி திட்டங்கள், கல்வியின் மீது விருப்பம் கொள்வதற்கான செயற்பாடுகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல் (Krishnapillai, 2009)[13].
- பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை பரிந்துரை செய்தல் (Sinnaththambi, 2007)[4].
- பாடசாலைக்குரிய பௌதீக வளங்களை பெற்று கொடுத்தல் (Thanapalan, 2003)[16].
- விசேட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளல், மாணவர்மையக் கற்பித்தலை உறுதி செய்தல் (Jayarasa, 2008)[3].
- அதிபர், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் அனைவரும் இணைந்து செயற்படுவதனூடாகவே மாணவர்களின் கற்றலுக்கு வாய்ப்பளிக்க முடியும் (Chandarasegaram, 2008)[7].
- விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக பெற்றோர்களின் தொடர்பை விருத்தி செய்து கொள்வதுடன் பிள்ளையின் ஒவ்வொரு விருத்திக்கட்டங்கள் தொடர்பிலும் தனிப்பட்ட ரீதியாகப் பெற்றோர்களுடன் கலந்துரையாடுவது சிறப்பாக அமையும் (Niththilavannan, 2008)[20].
- கற்பித்தல் நடவடிக்கைகளின் போது ஒழுங்கான பாடத்திட்டமிடல் மற்றும் கற்பித்தல் துணைச்சாதனங்கள் தொடர்பில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். மாற்றுத்திறன்களையுடைய மாணவர்களையும் கொண்ட வகுப்பறையில் பொருத்தமான பாடத்திட்டமிடல் மற்றும் பொருத்தமான காட்சித்துணைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் (Jaufar, 2009)[19].

எனவே மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து தமது வாழ்க்கையை தரப்படுத்த முயற்சித்து வரும் இப்பகுதி மக்களுக்கு கல்வினூடாக வழிகாட்டுவது அவசியமாகும். உலகம் தொழினுட்பவியல் சார்ந்து வேகமாக முன்னேறி வரும்போது இப்பகுதிப் பாடசாலை மாணவர்களும் நடப்பியல் உலகில் தமக்கான இடத்தைப் பேணிக்கொள்ள கல்வியே கருத்தனமாக அமைவதால் கற்றல் சார்ந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வழிகாட்டுதல் கல்விச் சமூகத்தைச் சார்ந்த அனைவரினதும் கடமையாகும்.

## References:

1. Anas, P. L., & Nawastheen, F. M. (2019). Teachers' perception towards in fulfilling diverse learners needs in the classroom teaching-learning process. South Eastern University

International Arts Research Symposium - 2019, http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170

2. UNESCO(1994). The Salamanca Statement and Framework for Action on Special Needs Education(Online).Paris:UNESCO.Availableform: http://www.unesco.org/education/ pdf/SALAMA E PDF (accessed on 5 December 2011).
3. Jayarasa, Saba. (2008). *Aapathhu Vizimbilulla Katpor.[Students at Risk in the Learning Process]* Colombo: Chemamadu Printers.
4. Sinnaththambi, K. (2007). *Kalvi Aayviyal. [Research in Education]* Colombo: Jeya International Publication.
5. Nawastheen, F. M., Jazeel, M. I. M., Sifani, K. R., & Ponniah, K. (2020). Teachers ‘roles in Developing Self-Regulated Learning Strategies Among Students of Puttalam Division in Sri Lanka. Journal of Critical Reviews, 7(19), 5076-5084.Doi: 10.31838/jcr.07.19.600
6. Jayarasa, Saba. (2006). *Kalviyiyal Putiya Seerthiruththangal [Modern Reforms in Education]*. Colombo: Chemamadu Printers.
7. Chandarasegaram, S. (2008). *Samakala Kalvimuraihalin Sila Parimanangal [Dimention of Contemporary Education]*. Colombo: Chemamadu Printers.
8. Chandarasegaram, S. (2004). *Kalvi Oru panmuha Nokku [Multifacedted Prespective in Education]*, Uma Printers.
9. Paramanantham, S. (2007). *Utpaduththal Kalvi [Inclusive Education], Ahavizi.* Colombo: Chemamadu Publication.
10. Chandarasegaram, S. (2005). *Kalviyiyal Katturaihal [Academic Essays in Education]* Colombo: Poobalasingam Book Depot.
11. Sinnaththambi, M. (2008). *Paadasalaiyum Samoohamum [School and Socity]*, Colombo: Kumaran Puththaha Illam (Kumaran Bookshop).
12. Selvaraja, M. (2005). *Kalviyiyal Adippadai Ennakkarukkal [Basic Consept in Education]*, Evergreen Printers.
13. Krishnapillai, Vimala. (2009). *Vazikattalum Aalosaniyum [Guidence and Counselling]*. Colombo: Chemamadu Printers.
14. Logeswaren, R. (2008). *Kattralai Pathikkum Karanihalum Aasiriyarum [Learning Factors and Teachers], Ahavizi.* Colombo: Chemamadu Publication.
15. Mahesan, A. (2009). *Vazikattal Aalosanai Sevai [Guidence and Counselling]*, Eastern University of Sri Lanka, Chenkaladi, Sri Lanka.
16. Thanapalan, P. (2003). *Kattpikkum kalai puthiya piravesangal [New Admission in the Art of Teaching]*. Jaffna: Kattpaha Vinayagar Printers.
17. Janareththanam, K. (2005). *Vetriharamana katpiththalukkukku Paadaththai Thittamidal [Lesson Planing for successful Teaching], Ahavizi.* Colombo: Chemamadu Publication.
18. Thanaraj, T. (2005). *Seyalvazi Aayvu Or Arimuham [Introduction of Action Research]*.Colombo: Kumaran Bookshop.
19. Pakeer Jaufar, P.K. (2009). *Manavarin Vahupparai Nadaththai [Behaviors of Students in Classroom]*. Colombo: Kumaran Bookshop.
20. Niththilavannan, A. (2008). *Ilankaiyin Naveena Kalviyal Pokuhal [Modern Education System in Sri Lanka]*. Jaffna: Tharsana Publishers.